**பீசீசீ லங்கா கம்பனி – 2021/ 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீசீசீ லங்கா கம்பனியின் (''கம்பனி'') 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கொள்வனவு முற்பணங்கள், தொடர்புடைய தரப்பினரிடமிருந்த பெற வேண்டிய வாடகை மற்றும் வியாபார கடன் பட்டோர் மீதிகள் முறையே ரூபா 1,420,474, ரூபா 5,306,200 மற்றும் ரூபா 138,676,697 ஆக காணப்பட்டது. அவற்றில் முறையே ரூபா 1,420,474 , ரூபா 1,961,088 மற்றும் ரூபா 1,167,208 கூட்டுத்தொகையான கடன் மீதியில் 05 முதல் 12 வருடங்கள் வரையான வீச்சில் அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 1,420,474 தொகையான மீதிகளுக்குரிய 06 நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், சில கடிதங்கள் மீள கிடைத்ததுடன் சில கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. இந்த பெறுமதிக்காக 2016/2017 கணக்காண்டுகளில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1985, 2002 மற்றும் 2004 ஆகிய வருடங்களில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ரூபா 58,265,037 மற்றும் 2003 ஆம் ஆண்டில் களுபோவிற்றியான தேயிலை கம்பனியிலிருந்து ரூபா 10,000,000 படி பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகைக்கு மீளாய்வாண்டின் செலுத்த வேண்டிய வட்டி முறையே ரூபா 57,165,429 மற்றும் ரூபா 51,118,341 ஆக காணப்பட்டது. இந்த பணத்தை தீர்ப்பனவு செய்வதற்காக கம்பனி நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் ரூபா 6,747,521 ஆன வட்டித் தொகை செலுத்த வேண்டிய தொகைக்கு புதிதாக சேர்ந்தவாறு காணப்பட்டது. | தெங்கு அபிவிருத்தி சபைக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,000,000 படியாக செலுத்துவதற்கு இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ள 2022/08/24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் பதில் கிடைக்கவில்லை. கழுபோவிட்டியான தேயிலை கம்பனிக்கு செலுத்த வேண்டிய அடிப்படை கடன் தொகையான ரூபா 10,000,000 ஆன தொகை 2022/06/21 ஆந் திகதி செலுத்தப்பட்டதுடன், அத்திகதியின் பின்னர் வட்டிக் கணிப்பிடுதல் இடம்பெறுவதில்லை.<br><br>கடந்த காலப்பகுதிக்குரிய வட்டி தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மற்றும் வட்டியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டியதாக ரூபா 4,508,696 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கணக்குகளில் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று காண்பிக்கப்படவில்லை என்பதால் இது கணக்காய்வில் சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது. | ‘‘பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6-9 பந்திகளுக்கமைய’’ பதிவழித்தல் தொடர்பிலான அறிவுரைக்கமைய செயற்படுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டது. 2022/23 கணக்காண்டின் போது இதற்குரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 41,532,452 தொகையான செலுத்த வேண்டிய வீதவரி, புரள்வு வரி, பாதுகாப்பு வரி, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் வியாபார கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புரள்வு வரி, பாதுகாப்பு வரி, பொருட்கள் மற்றும் சேவை வரி ஆகியவற்றுக்கான நிலுவைத் தொகை, நீதி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் இருந்து பணம் கிடைத்த பிறகு செலுத்தப்படும். | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 124,752,054 ஆன இலாபமொன்றாவதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 43,600,867 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 81,151,187 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு தேங்காய் எண்ணெய் கொள்வனவுக் கிரயம் ரூபா 406,053,269 இனால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கு ஒப்பாக தேங்காய் எண்ணெய் விற்பனை வருமானம் ரூபா 497,991,739 இனால் அதிகரித்தமை பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முழுமையாக தேய்விடப்பட்டுள்ள தற்போதும் பணன்படுத்தப்பட்டவாறு காணப்படும் ரூபா 43,068,294 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.<br><br>காணிகள் தொடர்பில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள சொத்துக்களையும் எதிர்காலத்தில் படிப்படியாக மீளாய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் மற்றும் கணக்குகளில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பீ.சீ.சீ கம்பனிக்கு உரிய 12 ஏக்கர் 3 றூட் 8.77 பேர்ச் பரப்பளவான காணி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 8,195 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 17 ஆந் திகதிய 15/1874/702/010-VII ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மற்றும் 2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய 16/0597/731/009-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்தக் காணியின் 6 ஏக்கர் அளவான பகுதி கொழும்பு நீதிமன்ற பியசவினை நிர்மாணிப்பதற்காக நீதிமன்ற அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் | அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம், 2019 ஆம் ஆண்டு நீதிமன்ற சதுக்கத்தை நிர்மாணிப்பதற்காக மொத்த காணியில் 06 ஏக்கரில் ஒரு பகுதி கொழும்பு மாவட்ட செயலாளர் ஊடாக நீதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது. இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் 2013 ஆம் ஆண்டு தொடர்பான மதிப்பீட்டு பெறுமதி 2021/2022 நிதியாண்டின் கணக்கு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இழப்பீடு பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு | நட்டஈட்டினை பெற்றுக் கொள்ளும் பணிகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையின் பிரகாரம் காணிகளை கையளிப்பதற்கு மற்றும் நட்டஈடு பெற்றுக் கொள்ளும் பணிகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருகிறது. | |
| (ஆ) | கம்பனி அமைந்துள்ள வளாகத்தினுள் 111,310 சதுர அடிகள் பரப்பளவான 32 களஞ்சியங்கள் மற்றும் 3,600 மெற்றிக் தொன் இயலளவுடனான 4 எண்ணெய் தாங்கிகள் காணப்பட்டன. இந்த களஞ்சியத்தின் ஒரு சதுர அடி ரூபா 55 முதல் ரூபா 70 இற்கு இடைப்பட்ட தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2,864 சதுர அடிகள் பரப்பளவான களஞ்சியமொன்று ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி வணிக பெறுமதியுடைய கம்பனிகள் வளாகத்தில் காணப்படல், இந்த களஞ்சியங்களை உரிய முறையில் பழுதுபார்த்திராமையால் இவ்வாறு குறைவான தொகைக்கு வழங்க நேர்ந்தது. | நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை காரணமாக தொழில்களை நடத்துவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் களஞ்சியங்களை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் களஞ்சியங்கள் அனைத்தையும் நவீன வசதிகளுடன் பழுதுபார்க்க நிறுவனம் திட்டமிட்டிருந்தாலும், இதற்காக நிறையச் செலவினங்களையும் மேற்கொள்ள நேரிடும். | வருமானத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பீ.சீ.சீ. கம்பனியை மீளமைத்தல் மற்றும் மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், வத்துபிட்டிவல முதலீட்டு உற்பத்தி வலயத்தின் வ/ப கன்டினன்டல் லங்கா (தனியார்) கைத்தொழிற்சாலை அமைந்திருந்த 03 ஏக்கர் பரப்பளவான இடமொன்று 2012 மார்ச் 26 ஆந் திகதி பீ.சீ.சீ. கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2012 ஆம் ஆண்டின் போது கம்பனியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற சவர்க்கார உற்பத்தி | சோப் நூடுல்ஸ் உற்பத்தி இங்கு ஒருமுறை செய்யப்பட்டாலும், அதன் கிரயமும் மிக அதிகமாக இருந்தது. மேலும், அந்த பகுதியில் இருந்த கான்டினென்டல் லங்கா (தனியார்) தொழிற்சாலைக்கு சொந்தமான பெரிய திறன் கொண்ட கொதிகலனும் ஆலையில் நிறுவப்பட்டுள்ளது. எனவே, எரிபொருள் விலை மிகவும் அதிகமாக உள்ளது. இதுகுறித்து, பணிப்பாளர் சபைக்கும் தெரிவித்து, | பயன்படுத்த முடியாத இயந்திரங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்சாலையின் இயந்திரங்களை வத்துபிட்டிவல முதலீட்டுச் சபையின் வளாகத்திற்கு கொண்டு சென்று நிறுவப்பட்டுள்ள போதிலும், அதனை பொருத்திய திகதி முதல் கணக்காய்வு திகதி வரையிலும் பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முடிவெடுக்கப்படும். | |
| (ஆ) | அரச முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த 02 வாகனங்கள் மற்றும் கம்பனிக்குச் சொந்தமான மீள்மதிப்பீடு செய்யப்படாத 03 வாகனங்கள் மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்படாத போர்க் விப்ட் ஒன்றும் 02 முதல் 04 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் ஓட்டத்திற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டமையால் கம்பனியின் வளாகத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட இரண்டு வாகனங்களும் எதிர்காலத்தில் அமைச்சிடம் கையளிக்கப்படும். டபள் கெப் வண்டிக்கு புதிய என்ஜினை நிறுவவோ அல்லது என்ஜினை பழுதுபார்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எஞ்சிய வாகனங்களை கைத்தவிர்க்கும் பணியை தொடர முகாமைத்துவம் முடிவு செய்துள்ளது. | இந்த வாகனங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டும் அல்லது கைத்தவிர்க்கப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டில் கம்பனியின் மீள்கட்டமைப்பின் போது 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் ஒவ்வொரு சம்பள படி நிலைகளில் வைத்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதன் 44 நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான 06 உத்தியோகத்தர்கள் எனுமாறு 50 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஊழியர் சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 34,687,639 மற்றும் ஆளணி | நிறுவனத்தின் அத்தியாவசிய செயற்பாடுகளை பேணுவதற்காக, அந்த காலப்பகுதிகளில் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்கு தேவையானவாறு அதிகபட்சமாக 57 இனை விஞ்சாத வகையில் ஆட்சேர்ப்பு வரையறுக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ப பதவிகளில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.<br><br>2022 ஆம் ஆண்டில், நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| விநியோகம் மூலம் 15 முதல் 29 இற்கு இடைப்பட்ட காலத்தில் கம்பனியின் கடமைகளுக்காக இணைப்பு செய்யப்பட்டு அதற்காக ரூபா 9,081,507 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்றப் பரிசோதனையின் போது எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் அடையப்பட்ட பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றத்தினை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன், 06 பணிகளில் 03 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 06 பிரதான உருப்படிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பணியாளர்களை மட்டுமே அழைத்து வந்து தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமையால், செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை. | திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |